*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **23 ஆகஸ்ட் 2025**

**<u>பத்திரிகை செய்தி</u>**

மூலக்குளம் ஈஸ்ட் கோஸ்ட் மருத்துவமனையின் சார்பில், ப்ளூ இந்தியா இயக்கத் தொடக்க விழா, இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆகியவை மருத்துவமனை வளாகத்தில் இன்று (23.08.2026) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இயக்கத்தினை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

நிகழ்ச்சியில், துணைநிலை ஆளுநரின் துணைவியார் திருமதி பீனா கைலாஷ், மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு ஆ. நமச்சிவாயம், மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு க. லட்சுமிநாராயணன், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு P.ராஜவேலு, மாநிலங்களவை உறுப்பினர் திரு S.செல்வகணபதி, சட்டமன்ற உறுப்பினர் திரு சிவ சங்கரன், புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் திரு பிரகாஷ் பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.